<u>08 .02.2021</u>

Case No.OS.191/2013

PW.1 - பாபு வெங்கடராமராவ் – 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் வழக்கை ராணிபேட்டையிலுள்ள தாவா சொத்துக்களுக்கு மட்டும்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த சொத்தை தவிர்த்து கிருஷ்ணகிரியிலும் என் தகப்பனாருக்கு சொத்து இருக்கிறது என்று சொன்னால் இல்லை. நான் கிருஷ்ணகிரியில்தான் இருக்கிறேன் என்றால் சரிதான் 30 வருடங்களாக அங்கு இருக்கிறேன். கிருஷ்ணகிரியில் நான் இருக்கும் வீடு எனக்கு சொந்தமானது என்று சொன்னால் சரிதான். 3/75, காந்திநகர், கிருஷ்ணகிரி. மேற்படி வீட்டின் கிரையம் என் பெயரில்தான் கிரையம் செய்யப்பட்டுள்ளது. எந்த வருடம் யாரிடமிருந்து கிரையம் வாங்கினேன் என்பது ஞாபகமில்லை. என் தகப்பனாருக்கு 5 மகன்கள் என்று சொன்னால் சரிதான். பழனிராவ், நான், குமார்ராவ், முரளிராவ்,கணேசன் ராவ். குமார்ராவ் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 5, 6 பிரதிவாதிகள் அவரின் வாரிசுகள். குமார்ராவ் எப்போது இறந்தார் என்பது ஞாபகமில்லை. அவர் இறக்கும்போது சுமார் 32 வயதிருக்கும். என் தகப்பனார் ராணிபேட்டையில்தான் காலமானார் என்று சொன்னால் சரிதான். அவர் ஆயுள்காலம் வரை ராணிபேட்டையில்தான் வசித்து வந்தார் என்றால் சரிதான். நாங்கள் வந்துபோனோம். என் தகப்பனாருடன்தான் வழக்கின் 1முதல் 3 பிரதிவாதிகள் வசித்து வந்தார்கள் என்று சொன்னால் சரிதான். என் தகப்பனாரை அவர்கள்தான் பார்த்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. என் தகப்பனார் எப்போது காலமானார் என்பது ஞாபகமில்லை. தகப்பனாரின் மூதாரையர் சொத்துக்கள் ஆரணியில் இருந்துவந்தது. அதில் என் தகப்பனாருக்கும் பங்கு வந்தது என்றால் சரிதான். எப்போது வந்தது என்பது எனக்கு ஞாபகமில்லை. தற்போது அந்த வீடு உள்ளதா என்று சொன்னால் ஆரணி வீட்டை விற்றுதான் இந்த சொத்தை வாங்கினார்கள். எப்போது விற்றார்கள் என்பது எனக்கு ஞாபகமில்லை. என் தகப்பனாரின் அப்பா பெயர் கிருஷ்ணாஜிவ். என் பாட்டி பெயர் தெரியவில்லை. ராணிபேட்டைக்கு

நாங்கள் வரும்போதே என் தாத்தா இறந்துவிட்டார். பாட்டி எப்போது இறந்தார் என்பது எனக்கு ஞாபகமில்லை. பிரதிவாதிகள் அனுப்பிய பதில் அறிவிப்பை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிருரையை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. தாவா சொத்தை என் தகப்பனார் எப்போது வாங்கினார் என்றால் 1960 என்று நினைக்கிறேன். யாரிடமிருந்து வாங்கிய கடனுக்கு அடமானம் வைத்தார் என்று சொன்னால் வைத்தி என்பவரிடம் வாங்கினார். எந்த ஆண்டு கடன் வாங்கினார் என்று தெரியாது. ஆனால் ராணிபேட்டை வீட்டை வாங்கும்போது கடன் வாங்கினார். என் அப்பா தனது மகன் குமார் பெயரில் கிருஷ்ணகிரியில் சொத்து வாங்கியுள்ளாரா என்றால் வாங்கியுள்ளார். வாங்கிய வருடம் சுமார் 1980 இருக்கலாம். தற்போது அது கட்டிடமாக உள்ளது என்று சொன்னால் சரிதான். 3 மாடியாகும். 7 போஷனாக உள்ளது. நான் தற்போது அங்குதான் இருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். 7 போஷனும் வாடகைக்கு விட்டு வாடகை வருகிறது என்று சொன்னால் சரிதான். அந்த சொத்தை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். அந்த சொத்தில் பாகம் கோரி 1 முதல் 3 பிரதிவாதிகள் கிருஷ்ணகிரி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரிதான்.